**செய்தி வெளியீடு எண்: 901** **நாள்: 11.12.2018**

## <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (11.12.2018) தலைமைச் செயலகத்தில், சென்னையில் 13.12.2018 முதல் 20.12.2018 வரை நடைபெறவுள்ள 16–வது சென்னை சர்வதேசத் திரைப்பட விழாவிற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் 75 லட்சம் ரூபாய்க்கான காசோலையினை இந்தோ சினி அப்பிரிசியேஷன் பவுன்டேஷன் பொதுச் செயலாளர் திரு. E. தங்கராஜ் அவர்களிடம் வழங்கினார்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திரைப்பட உலகிற்குப் பெருமை சேர்த்திடும் வகையில் பல்வேறு உதவிகளை செய்துள்ளார்கள். இந்தியாவிலேயே முதன் முறையாக இந்திய சினிமா நூற்றாண்டு விழாவை சிறப்பாக 2013–ஆம் ஆண்டில் நடத்திட தமிழ்நாடு அரசின் சார்பில் தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபைக்கு ரூ.10 கோடி மானியமாக வழங்கினார்கள்.

இதே போன்று சென்னையில் நடைபெற்ற சர்வதேச திரைப்பட விழாக்களுக்கு பல்வேறு காலக் கட்டங்களில் தமிழ்நாடு அரசின் சார்பில் மானியமாக இதுவரை ரூ.3 கோடியே 25 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

2011–ஆம் ஆண்டு நடைபெற்ற ஒன்பதாவது சென்னை சர்வதேச திரைப்பட விழாவிற்கு ரூ.25 லட்சம் ரூபாயும், 2012–ஆம் ஆண்டு முதல் 2017–ஆம் ஆண்டு வரை நடைபெற்ற சென்னை சர்வதேச திரைப்பட விழாக்களுக்கு ரூ.25 லட்சம் ரூபாய் என்பதை ரூ.50 லட்சமாக உயர்த்தி ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், சென்னை சர்வதேச திரைப்பட விழாவிற்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த 50 லட்சம் ரூபாயை, இந்த ஆண்டு 75 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் உத்திரவிட்டு, இன்று (11.12.2018) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சர்வதேச திரைப்பட விழாவை நடத்தும் இந்தோ சினி அப்பிரிசியேஷன் பவுன்டேஷன் (Indo Cine Appreciation Foundation) பொதுச் செயலாளர் திரு. E. தங்கராஜ் அவர்களிடம் ரூ.75 லட்சத்திற்கான காசோலையை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜூ, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.இரா.வெங்கடேசன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு.இரா.சங்கர், இ.ஆ.ப., ICAF இணை செயலாளர் திரு.எஸ். முரளி, திரைப்பட நடிகைகள் திருமதி லிசி லட்சுமி, திருமதி குட்டி பத்மினி, திருமதி ஷைலஜா, திரைப்பட நடிகர் திரு.கே.வி.ஆர். மோகன், திரைப்பட தயாரிப்பாளர் திரு.கோபி கிருஷ்ணன், திரு.சீனிவாச சந்தானம், திரு.சித்ரா லஷ்மணன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 11.12.2018**